குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.12

2025-ம் ஆண்டு ஜுலை 02-ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 12-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னு | தொழில் | |
| தந்தை பெயர் | முத்துக்கவுண்டர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.58 மணி,

Accused A2.Subramani Present. A1.Ramasami died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 16.06.2013 ஆம் தேதி தாரமங்கலம் காவல் நிலையத்தில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் பாறைக்கல்லூரைச் சேர்ந்த அய்யம்பெருமாள் என்பவரின் மகன் வெங்கடேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.235/2013 சட்டப்பிரிவுகள் 379 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

2. பின்பு, முதல் தகவல் அறிக்கையில் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்து, மற்ற நகல்களை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. புகாரில் உள்ள சங்கதிகளின் கையெழுத்திற்கும், புகார்தாரரின் கையொப்பத்தில் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.02 18:13:47 +0530

வேறு ஒரு நபர் எழுதிய புகாரில் அ.சா.1 கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காலம் 15 –ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி.

4. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.05 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.02 18:13:50 +0530